முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 68/2019

நாள். 30.03.2026 பி.வா.சா.1 – திரு. செல்வன்

த/பெ - திரு. தங்கசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) தங்கசாமி உங்கள் தகப்பனாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 8 பேர்கள் ஆவார்கள். அவர்கள் பெயர் என்ன என்ன என்றால் ராஜன், மல்லிகா, செல்வன் ஆகிய நான் , செல்வராஜ், சந்திர பாப்பா, ஜான்சன், ஜான்சி ராணி, மற்றும் ஜெயா ஆகும். மல்லிகா என்பவர் எங்கு உள்ளார் என்றால் ஊரில் உள்ளார். வழக்கு தபசில் சொத்தானது உங்கள் தகப்பனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது மற்றும் கிரையம் வாங்கியது என்றால் சரிதான்.

2) உங்கள் தகப்பனார் அவர் கிரையம் வாங்கிய பின்பு அவர் வாழும் காலத்தில் யாருக்கும் பிரித்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் வழக்கு தபசில் சொத்தை வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் சேர்ந்து தான் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். வாதி 3 பேருக்கும், 5 பிரதிவாதிக்கும் தகப்பனார் உயிருடன் இருக்கும் போது திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அவர்கள் திருமணம் சமயத்தில் தகுந்த சீர் கொடுக்கவில்லை என்றால் சீர் கொடுக்கப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.30 18:41:38 +0530

சீர் கொடுத்தாலும் சொத்தில்பெண் பிள்ளைகளுக்குபங்கு உண்டு என்று உங்களுக்கு தெரியுமா என்றால் சரியல்ல .

3) பங்கு கிடையாது என்று சாட்சி கூறுகிறார். உங்கள் தகப்பனார் எந்த வருடம் இறந்து விட்டார் என்றால் 2007 ம் வருடம் ஆகும். உங்கள் தகப்பனார் காலம் சென்ற பின்னர் 3 வாதிகளும் சொத்தை பாகம் வைத்து கேட்டார்கள் . அதற்கு நீங்கள் பாகம் தருகிறேன் என்று கூறி காலம் கடத்தி உள்ளீர்கள் என்றால்சரியல்ல. நீங்கள் பாக பிரிவினை ஆவணம் ஏற்படுத்திய போது உங்கள் தகப்பனார் வாரிசு சான்றிதழை பத்திர பதிவு துறையில் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன்.

4) நீங்கள் பத்திரம் பதிவு செய்யும் ே பாது உங்கள் தகப்பனாரின் வாரிசு சான்றிதழை கொடுக்காமல் , உங்கள் தகப்பனாரின் பெண் பிள்ளை வாரிசுகளை மறைத்து பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் ஏற்படுத்திய பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஆனது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நீங்கள் ஏற்படுத்திய பி.வா.சா.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் 3 வாதிகளும் கையொப்பம் செய்யவில்லை என்றால்சரிதான். அதேபோல் வாதிகள் 3 பேரும் உங்கள் தகப்பனார் சொத்தில் பங்கு வேண்டாம் என்று விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்தார்களா என்றால் இல்லை.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.03.30 18:41:42 +0530

5) நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் 4 வது பத்தியில் பணகுடி பேரூராட்சி முறையான கட்டிட வரைபடம் அங்கீகார கட்டிட வரைபடம் பெற்று கலந்தபனை கனரா வங்கியில் கட்டிடம் கட்ட ரூ.20 லட்சம் கடன் பெற்று கீழ்தளத்தில் 9 வீடுகள் கட்டியுள்ளார்கள் மேற்படி வங்கி பெயரில் 8 ம் பிரதிவாதி ஆவண வைப்பு அடமான பத்திரம் பதிவு செய்து கொடுத்ததாக உங்கள் நீருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்கள் ஆனால் 8 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

6) வழக்கு சொத்தில் வாதிகளுக்கு பங்கு கொடுக்க கூடாது என்று பிரதிவாதி ஆகிய நீங்கள் பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளீர்கள் என்றால்ச ரியல்ல. நீங்கள் ஏற்படுத்தியுள்ள பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் வாதிகளின் சொத்தில் உள்ள பங்குகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தகப்பனார் சொத்தில் வாதிகளுக்கு உண்டான பங்கு சட்டப்படியாக கிடைக்ககூடியது என்று சொன்னால் சரியல்ல.

(10 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கானது ஒத்திவைக்கப்படுகிறது.)

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.30 18:41:49 +0530